# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 106/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-4/PW- 3 | Village: |
| Name : ரவிக்குமார் | Age :67 |
| Father's/Husband's Name : ராதாகிருஷ்ணன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of** 19.11.2025

சாட்சியை கும்பகோணம் மதுவிலக்கு அமல் பிரிவு தலைமை காவலர் திரு .அருள்செல்வம். என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1, 2 எதிரிகள் ஆஜர் 3, 4 எதிரிகள் இறந்துவிட்டார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அண்ணலக்கரகாரத்தில் வசித்து வருகிறேன். நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பு கும்பகோணம் அண்ணலக்கரகாரத்தில் உள்ள விஏஓ அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது போலிசார் என்னிடம் வந்து கையொப்பம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம்**

**மற்றும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 4 மற்றும் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 07.01.2012 ம் தேதி மாலை 6.30 மணியளவில் சாக்கோட்டையில் உள்ள மதுவிலக்கு அலுவலகத்தின் முன்பு இந்த வழக்கின் எதிரிகளான மகேஷ் மற்றும் அன்பழகனை கைது செய்து அவர்கள் எங்கள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததற்கு சாட்சியாக நான் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டேன். தற்போது வயோதிகத்தின் காரணமாக கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு மற்றவற்றை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினமே இரவு 9.30 மணியளவில் சம்பவ இடமான பாலகுரு வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது சாக்கோட்டையில் உள்ள மதுவிலக்கு போலிசார் என்னு முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக நான் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டேன். தற்போது வயோதிகத்தின் காரணமாக கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு மற்றவற்றை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- P. Rangeshwari,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**